கல்யாண முகூர்த்தப் புடைவைகளின்
கைராசியான முன்னணி நிறுவனம்
திருமாட்டி புடைவைக் கடல்
122, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: நான்கு
Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

மங்கையர், ஆடவர் மனதைக் கொள்ளை கொள்ளும்
வண்ண வண்ணப்பட்டு, பருத்தி புடைவைக் கடல்
திருமாட்டி புடைவைக் கடல்
122, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

சுடர்: 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 ஐப்பசி 08 செவ்வாய்க்கிழமை (25 — 10 — 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 334

## ஐ.தே.கவின் கிராண்ட்பாஸ் கூட்டத்தில் நள்ளிரவுப் பயங்கரம்

# கொழும்புக் குண்டு வெடிப்பில் காமினி பலி!

# இரு முன்னாள் அமைச்சர்கள், 60 பேர் சாவு!!



## 300 பேர் படுகாயம்

கொழும்பு, ஒக்ரோபர் 25

கொழும்பு கிராண்ட்பாஸில், ஞாயிறு நள்ளிரவுக்குச் சற்றுப் பின்னர் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரசாரக் கூட்டத்தில் பாரிய குண்டு ஒன்று வெடித்தது! அந்தப் பயங்கரக் குண்டு வெடிப்பில் ஐ. தே. கவின் ஜனாதிபதி வேட்பாளரும், எதிர்க் கட்சித் தலைவருமான காமினி திஸாநாயக்கா (வயது 53) பலியானார்.

முன்னாள் அமைச்சர்கள் வீரசிங்க மல்லிமாராய்ச்சி, ஜி.எம். பிரேமச்சந்திரா, ஐ.தே.க. பொதுச் செயலாளர் டாக்டர் காமினி விஜேசேகரா உட்பட 60 பேர் அந்த இடத்திலேயே மரணமானார்கள்; 300 பேர் வரை படுகாயமடைந்தனர்.

காமினி கூட்டத்தில் பேசி முடிந்ததும் மேடைக்கு முன்னால் நின்று மக்களின் கரகோஷத்தை வழமை போல் ஏற்றுக்கொண்ட சமயம் வெடிகள், வாண வேடிக்கைகள் ஆகியவற்றுக்கு மத்தியில் பலத்த சத்தத்துடன் குண்டு வெடித்தது.

மக்கள் கூட்டத்தில் முன் வரிசையில் அமர்ந்திருந்த தற்கொலைத் தாக்குதல் நபரே குண்டை வெடிக்க வைத்திருக்கலாம் எனச் சந்தேகிக்கப்பட்டது.

குண்டு வெடிப்பில் படுகாயமுற்ற காமினி திஸாநாயக்கா அவசர அவசரமாக கொழும்பு பெரியாஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டார் என்றும்— அங்கு அனுமதிக்கப்பட்ட பின்னர் அவரின் உயிர் பிரிந்தது என்றும் செய்தி ஏஜென்ஸி ஒன்று தெரிவித்தது.

குண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்டவர்களில் காமினி திஸாநாயக்கா மற்றும் முன்னாள் அமைச்சர்கள் ஐ. தே. க. செயலாளர் உட்பட ஏழுபேர் ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னணி உறுப்பினர்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

படுகொலைச் செய்தி நேற்று அதிகாலை நாடு முழுவதும் பரவியபோது பல இடங்களில் பதற்றம் நிலவியது.

வடக்கு – கிழக்கு மாகாணங்களில் ஏற்கனவே அமுலில் இருந்த அவசரகாலச் சட்டம் நாடு முழுவதும் விஸ்தரிக்கப்பட்டது. நாடு முழுவதும் ஊரடங்கும் அமுலுக்
(4 ஆம் பக்கம் பார்க்க)

## பூரண அரசமரியாதையுடன் சனியன்று இறுதிச்சடங்கு

கொழும்பு, ஒக். 25

காமினி திஸாநாயக்காவின் இறுதிச் சடங்குகள் எதிர் வரும் சனிக்கிழமை மாலை 4 மணிக்கு கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் பூரண அரசமரியாதையுடன் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரதமர் சந்திரிகா குமாரதுங்காவின் பணிப்புரைக்கு அமைய அரசாங்கம் இந்த முடிவை எடுத்துள்ளது.

இறுதிச் சடங்குகள் பற்றிய ஒழுங்குகளைச் செய்வதற்கு
(3 ஆம் பக்கம் பார்க்க)

## முன்னாள் அமைச்சர்களின் இறுதிக் கிரியைகள்

காமினியுடன் உயிரிழந்த முன்னாள் அமைச்சரும் எம். பியுமான வீரசிங்க மல்லிமாராய்ச்சியின் இறுதிக்கிரியைகள் நாளை கனத்தை பொது மயானத்தில் நடைபெறும்.

மற்றொரு முன்னாள் அமைச்சரும் எம். பியுமான ஜி. எம். ப்ரேமச்சந்திராவின் இறுதிச்சடங்குகள் நாளை மறுதினம் பிற்பகல் 3 மணிக்கு மாவத்தகம சாமோதய மைதானத்தில் நடைபெறும்.

மேல் மாகாணசபை அங்கத்தவர் கே. பி. கிறிஸ்ரி பெரேராவின் இறுதிச்சடங்குகளும் நாளை மறுதினம் மாலை 4.30 மணிக்கு கனத்தை பொதுமயானத்தில் றோமன் கத்தோலிக்க பிரிவில் நடைபெறும்.

(உ-4)

## 24 மணி நேரத்தின் பின் ஊரடங்கு நீக்கப்பட்டது

காமினி கொலையுண்டதை அடுத்து நேற்று அதிகாலை நாடு முழுவதிலும் பிறப்பிக்கப்பட்ட ஊரடங்குச் சட்டம் — 24 மணி நேரத்தின் பின்னர் — இன்று காலை 4 மணிக்கு நீக்கப்படுவதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

அவசியம் ஏற்படுமானால் குறுகிய நேர அறிவித்தலில் மீண்டும் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப் படலாமென்றும் அறிவிக்கப்பட்டது.

நாடு முழுவதிலும் தற்பொழுது அமுலில் உள்ள அவசரகாலச் சட்டம் தொடர்ந்து நீடிப்பதாகவும் அறிவிக்கப்பட்டது.

★ அவசரகாலச் சட்டத்தின் கீழ் எவரையும் கைது செய்து விசாரணை நடத்தவும், குற்றப்பத்திரிகைகள் தாக்கல் செய்யாமல் தடுத்து வைக்கவும் ஆயுதப்படையினருக்கும், பொலிஸாருக்கும் பூரண அதிகாரம் வழங்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(உ-எ-4)

## 300 பேருக்கு சிகிச்சை: 150 டாக்டர்கள் பணியில்!

கிராண்ட்பாஸ் குண்டு வெடிப்புச் சம்பவத்தில் காயமுற்ற சுமார் 300 பேருக்கும் சிகிச்சையளிக்கும் பணியில் 150 டாக்டர்கள் ஈடுபட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

இவர்களில் பொது சத்திர சிகிச்சை வைத்தியர்கள், கண் சிகிச்சை நிபுணர்கள், காது, மூக்கு மற்றும் தொண்டை வைத்திய நிபுணர்களும் அடங்குவர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(உ-எ)



மல்லிமாராய்ச்சி



பிரேமச்சந்திரா



விஜேசேகரா

## படுகாயமுற்ற ஒஸி ஆபத்தான நிலையில்!

ஸ்ரீலங்கா மக்கள் கட்சியின் ஒரு பிரிவின் தலைவரான ஒஸி அபேகுணசேகராவும் ஞாயிறு நள்ளிரவுக்குப் பின்னர் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தில் படுகாயமுற்றார்.

அவர் கொழும்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்.

அவரின் நிலைமை மிகவும் கவலைக்கிடமானதாக இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.
(4ஆம் பக்கம் பார்க்க)

## தற்கொலைத் தாக்குதல் நடத்தியவர் ஆணா? பெண்ணா? ஊனமுற்றவரா?

### பல்வேறு சந்தேகங்கள்

கிராண்ட்பாஸ் குண்டு வெடிப்புக்குப் பொறுப்பான தற்கொலைப்படைத் தாக்குதல் நபர் குறித்து பல்வேறு சந்தேகங்கள் தெரிவிக்கப்பட்டன.

முதலில் வெளியான செய்திகள் பெண் ஒருவரே தற்கொலைத் தாக்குதலை நடத்தினார் என்றும் —

அந்தப் பெண்ணினுடையது எனக் கருதப்படும் நீண்ட தலைமுடியுடன் கூடிய மண்டைஓட்டை, சம்பவம் நடந்த இடத்துக்கு அருகில் உள்ள இரண்டு மாடிக் கட்டடத்தின் கூரை மீது விழுந்து
(3 ஆம் பக்கம் பார்க்க)

## புதியவேட்பாளர் மற்றும் செயலாளரை அவசரமாகத் தெரிவு செய்யும் நிலை

### 3 நாளில் தேர்தல் ஆணையாளருக்கு அறிவிக்க வேண்டும்

காமினியின் இடத்துக்கு ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவுள்ள புதிய வேட்பாளரையும், கொலையுண்ட கட்சிச் செயலாளர் காமினி விஜேசேகராவின் இடத்துக்கு புதிய ஒருவரையும் மூன்று நாட்களுக்குள் அவசரமாகத் தெரிவு செய்ய வேண்டிய இக்கட்டான நிலை ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஏற்பட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் சட்டப்படி வேட்பாளர் ஒருவர்
(3 ஆம் பக்கம் பார்க்க)

## மூன்று பதவிகளுக்கும் இன்று தெரிவு

கொழும்பு, ஒக். 25

ஜனாதிபதி தேர்தலுக்கான புதிய வேட்பாளரைத் தெரிவு செய்வதற்காக ஐக்கிய தேசியக் கட்சியின் நிர்வாகக் குழு இன்று மாலை 5 மணிக்கு அவசரமாகக் கூடுகின்றது.

கட்சித் தலைவரும் ஜனாதிபதியுமான டி.பி. விஜேதுங்கா இக் கூட்டத்துக்குத் தலைமை வகிப்பார்.

அதேசமயம் ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற குழுவின் விசேட கூட்டம் இன்று காலை 9 மணிக்கு நாடாளுமன்றக் கட்டடத்தில் நடைபெறவிருப்பதாக அறிவிக்கப்பட்டது.

காமினியின் மறைவால் ஏற்பட்டுள்ள எதிர்க்கட்சித் தலைவர் பதவி வெற்றிடத்துக்கு புதியவர் ஒருவர் இக்கூட்டத்தில் தெரிவு செய்யப்படுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

காமினியை எதிர்த்து இப்பதவிக்கு முன்னர் போட்டியிட்ட ரணில் விக்கிரமசிங்க இம்முறை போட்டியின்றி இப்பதவிக்குத் தெரிவு செய்யப்படுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

(உ-4)

## புதிய செயலாளராக தஹம் விமலசேன?

கொழும்பு, ஒக். 25

ஐ.தே.கவின் முக்கிய கூட்டம் ஒன்று நேற்று நடைபெற்றது. அக்கூட்டத்தில் கட்சியின் துணைப் பொதுச் செயலாளர்களில் ஒருவரான தஹம் விமலசேன கட்சியின் புதிய செயலாளராகத் தெரிவு செய்யப்பட்டார் என பி.பி.ஸி அறிவித்தது.

இவரின் தெரிவை இன்று
(3ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி தேர்தல் திட்டமிட்டபடி நவம்பர் 9 ஆம் திகதி நடைபெறும்

ஜனாதிபதி வேட்பாளரான காமினி திஸநாயக்கா படுகொலையுண்ட போதிலும் ஜனாதிபதித் தேர்தல் எதிர் வரும் 9 ஆம் திகதி திட்டமிட்டபடி நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருக்கிறது.

காமினி கொலையின் பின் அவசரமாகக்கூடிய ஸ்ரீலங்கா அமைச்சரவை, ஜனாதிபதித் தேர்தல் சட்டத்துக்கு அமைவாக ஜனாதிபதித் தேர்தலை திட்டமிட்டபடி நடத்த முடிவு செய்தது.

ஜனாதிபதித் தேர்தல் திட்டமிட்டபடி நடைபெறும் என்பதை தேர்தல் ஆணையாளர் அலுவலகமும் உறுதி செய்தது.

ஜனாதிபதித் தேர்தல் சட்டத்தின்படி வேட்புமனுத் தாக்கல் செய்யப்பட்ட பின்னர்—

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர்— வேட்பாளர் ஒருவர் உயிரிழந்தால் அவரின் இடத்துக்கு புதிய வேட்பாளர்
(3 ஆம் பக்கம் பார்க்க)

## கைதான தேசத் துரோகிகள் நால்வர்

யாழ்ப்பாணம், ஒக். 25

தமிழீழ விடுதலைப் போராட்டத்தையும், தமிழ் மக்களையும் காட்டிக் கொடுத்து தேசத் துரோகம் புரிந்த நான்கு பேரை விடுதலைப் புலிகள் கைது செய்துள்ளனர்.

அவர்களின் விபரம் வருமாறு:-

1. பெயர்: நடராசா சந்திரகுமார் சின்னராசா, (வயது 25), தொழில் வியாபாரம், சொ. முகவரி [illegible] முகவரி ஸ்கந்தபுரம் — இனி நொச்சி.

2. பெயர்:- சிவப்பிரகாசம் செல்வராசா, (வயது 30), தொழில் வியாபாரம், முக [illegible] வியவனை [illegible] பிறட், (வயது 36), முகவரி
(3 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். நகரில் நேற்று நடைபெறவிருந்த அரசு- புலிகள் பேச்சு கைவிடப்பட்டது

காமினி திஸநாயக்கா கொல்லப்பட்டதை அடுத்து— நேற்று யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருந்த விடுதலைப் புலிகள் — அரசப் பிரதிநிதிகள் பேச்சுவார்த்தை கைவிடப்பட்டதாக (Called-Off) கொழும்பில் அறிவிக்கப்பட்டது.

ஞாயிறு நள்ளிரவுக்குப் பின் காமினி கொலையுண்டதை
(3 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

தினத்தந்தி, ஞாயிறுமலர், வெள்ளிமலர் இலவச இணைப்பு புத்தகத்துடன் விற்பனையாகின்றன. வெள்ளிமலர், குடும்பமலர் இரண்டும் ஒரே முறையில் எடுப்பவர்களுக்கு மட்டும் வியாழ மாற்ற புத்தகம் இலவசமாக வழங்கப்படும். சலுகை 31-10-94 மட்டும். கிடைக்குமிடம் கனகா றேடர்ஸ், திருநெல்வேலிச் சந்தி. (கி-9427)

இல. 455, ஸ்ரான்லி வீதியில், யாழ். மத்திய பஸ் நிலைய முன்பாக மூன்று அறைகளுடைய கடையும், கிணறு, மலசலகூடமுடைய காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: 55/3, அம்பலவாணர் வீதி, அத்தியடி. (33430)

ஒரு கிழமை வளர்ச்சியடைந்த பிறிமா புறொயிலர் குஞ்சுகளும், பிறிமா சிவப்பு பேட்டுக் குஞ்சுகளும், நன்கு உக்கிய கோழி எருவும் விற்பனைக்குண்டு. சி. குலசிங்கம், 9, றக்கா வீதி, Barக்கு முன்பாக, யாழ்ப்பாணம். (33491)

### தேவை

சிங்கப்பூரில் வாழும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சிறிய இந்து சமய பொறியியலாளர் குடும்பம் ஒன்றுக்கு வீட்டுப் பணிகள் செய்ய சமையல் அனுபவம், சுத்தம், சுபாவம் ஆகியவை உள்ள பெண் தேவை. மாதச் சம்பளம் 1000/- விமானச்சீட்டு இலவசம். பெயர் சரியான விலாசம் குறிப்பிட்டு உடன் தொடர்பு: இல. 711, உதயன், யாழ்ப்பாணம். (33474)

யாழ். நகரில் உள்ள தனியார் நிறுவனம் ஒன்றிற்கு போட்டோ பிரதி இயந்திரத்தை(Photo Copy Machine) இயக்குவதில் அனுபவமுள்ள ஆண்கள் மட்டும் சுய விவரத்துடன் 5-11-94 இற்கு முன் விண்ணப்பிக்கவும். 953, மே/பா உதயன். (கி/9525)

### சோதிடம்

கல்வியில் சித்தியா? உத்தியோகம் கிடைக்குமா? வியாபாரம் சிறக்குமா? விவாகம் நடைபெறுமா? வெளிநாடு போகவாமா? மற்றும் எதுவானாலும் கேட்டுப் பாருங்கள்! தினமும் காலை 8-30—12-30. த. சிவானந்தன், பிரபல சோதிடர் ஆனந்தா சோதிட நிலையம், 384, கோயில் வீதி, நல்லூர் வடக்கு. கிளை: ஆனந்தா சோதிட நிலையம், ஸ்ரான்லி வீதி, ஸ்ரீதர் தியேட்டர் முன்பாக, யாழ்ப்பாணம். தினமும் பி.ப. 3-00—6-00வரை. (33465)

## 6ஆம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம்: 24-01-1949
மறைவு: 25-10-1988

திதி 20-10 1994

சிவசிதம்பரப்பிள்ளை
சிவராஜபிள்ளை
(புளொரா)

ஆண்டு ஆறு—
சென்றாலும்
உங்கள் நினைவு—
மாறுமோ!
உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்.

அன்பு மனைவி,
பிள்ளைகள்
தாய்,
சகோதரர்கள்,
மற்றும்
குடும்பத்தினர்.
தீசன் வீதி,
மல்லாகம். (7630)

### பாலர் ஆசிரியராகலாம்

கடைசித் தகைமை க.பொ.த. (சா/த) சனி, ஞாயிறு வரமுடியாதோர் தபால் வழியிலும் பயிலலாம். விரைவில் பதிக. பாலர் ஆசிரியர் சங்கம், உயர்கலைக் கல்லூரி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (33496)

### மணமகள் தேவை

யாழ். இந்து, வயது 35, உயரம் 5' 2'', சைவபோசனம், புனர்பூசம் நட்சத்திரம், யாழ்ப்பாணம் தனியார் நிறுவனத்தில் பணிபுரியும் மகனுக்குப் பெற்றோர் பொருத்தமான மணமகளைத் தேடுகின்றனர். தொழில் புரிபவர் விரும்பத்தக்கது. ஜாதகக் குறிப்புடனும், சகல விவரங்களுடனும் தொடர்பு: இல. 710, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (33473)

## 72,73 ஆம் ஆண்டு அடையாள அட்டை புதுப்பித்தலுக்கான படப்பிடிப்பு

சண்டிலிப்பாய் உ.அ அதிபர் பணிமனைக்கு முன்பாக

சண்டிலிப்பாய் உ.அ.அதிபர் பிரிவுக்குட்பட்ட சகல கி. சேவகர் பிரிவுகளும் அடங்கும்

காலம்: 26 - 10 - 1994 — —27 - 10 - 1994 (புதன், வியாழன்) காலை 9.00 — 4.00 மணி வரை நடைபெறும்.

பொபி ஸ்ருடியோ
சுழிபுரம்.

[33509]

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



கனகரெத்தினம் [illegible]பிள்ளை


மலர்வு: 28—06—1905 உதிர்வு: 26—10—1991

வருடங்கள் மூன்று சென்றுவிட்டன. உங்கள் அன்பு எம்மை விட்டு அகலாதவை. உங்கள் ஆத்மா சாந்தியடைய அனைவரும் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

60, கொழும்புத்துறை வீதி,
யாழ்ப்பாணம். (33513)

## ஓராண்டு நினைவஞ்சலி



திருமதி
திருநாவுக்கரசு தருமலட்சுமி
(வேலணை மேற்கு)

ஜனனம்: 31 — 05 — 1909 மரணம்: 04 — 11 — 1993

திதி: 25 — 10 — 1994

கண்ணின் மணிபோல எமைக் காத்து வளர்த்திட்ட எம் அன்பு அம்மாவே! அப்பன் உறைகின்ற அம்பலத்துள் நீ சென்று ஆண்டொன்றும் ஆகுதம்மா! தாயே உன் பிரிவு எம்மை வாட்டுதம்மா.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

[illegible]

[33489]

# தாம் கொலை செய்யப்படலாம் என 4 நாட்களுக்கு முன் காமினி கூறினார்

கொழும்பு, ஒக். 25

விடுதலைப் புலிகள் என்னைக் கொலை செய்யத் திட்டமிட்டிருப்பதாகப் படையினரும், பொலிஸாரும் எனக்குத் தகவல் தெரிவித்துள்ளனர்.

படுகொலையுண்ட எதிர்க் கட்சித் தலைவர் காமினி திஸாநாயக்க கடந்த நான்கு நாட்களுக்கு முன் — கடந்த புதன்கிழமையன்று — தமது உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

சமாதான முயற்சிகளுக்கு படையினர் தடையாக இருப்பதாக பிரதமர் சந்திரிகா கூறியது தொடர்பாக கருத்து வெளியிடுகையிலேயே காமினி திஸாநாயக்க இதனைத் தெரிவித்திருந்தார்.

பிரதமர் சந்திரிகா நெருப்புடன் விளையாடுகிறார் என்றும் திரு. காமினி திஸாநாயக்க அப்போது செய்தியாளர்களிடம் கூறியிருந்தார். (உ-ஐ)

### ராவின் இரங்கற் செய்தி

காமினி திஸநாயக்காவின் மறைவு குறித்து இரங்கல் செய்தி ஒன்றை இந்தியப் பிரதமர் பி. வி. நரசிம்மராவ் ஸ்ரீலங்கா ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ளார். (உ-4)

## ராஜீவ்காந்தி கொலைப் பாணியில்

# தற்கொலைப் படைத் தாக்குதலை பெண் ஒருவரே நடத்தினார்!

### காமினியின் மைத்துனர் விக்கிரமசூரியா தகவல்

கொழும்பு, ஒக். 25

''குண்டுடன் வந்த தற்கொலைப் படையைச் சேர்ந்த பெண் ஒருவரே காமினியின் கொலைக்குக் காரணமாவார்.

''மேடையில் உடல் ஒன்றில் கால், கை மற்றும் தலைமுடி போன்றவை கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.''

— டாக்டர் வியல் விக்கிரமசூரியா இவ்வாறு தெரிவித்தார்.

காமினி திஸநாயக்காவின் மூத்த சகோதரியை திருமணஞ் செய்தவர் டாக்டர் விக்ரம வீரசூரியா.

அவர் பி.பி.ஸிக்கு அளித்த பேட்டியிலேயே மேற்படி விவரங்களைத் தெரிவித்துள்ளார். அப்பேட்டியின் விவரம் வருமாறு:-

திங்கள் அதிகாலை ஒரு மணி இருக்கும். காமினியின் ஆதரவாளர்கள் சிலர் வந்து என்னை நித்திரையில் இருந்து எழுப்பினர்.

பிரசாரக் கூட்டம் ஒன்றில் குண்டு வெடிப்புச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளதாகவும் காமினிக்கு பாரதூரமான காயங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

காமினியை கொழும்பு பெரியாஸ்பத்திரியின் விபத்து வார்ட்டுக்கு எடுத்துச் சென்றுள்ளதாகவும் அறிந்தேன்.

உடனே நான் எனது மனைவியுடன் ஆஸ்பத்திரிக்கு விரைந்தேன்.

அங்கு விபத்துப் பிரிவில் இறந்தவர்களின் பல சடலங்கள் நிலத்தில் கிடத்தப்பட்டிருந்ததைக் கண்டேன். இன்னும் சில சடலங்கள் வான் ஒன்றில் கொண்டு வரப்பட்டு இறக்கப்படுவதையும் பார்த்தேன்.

அங்கு குழுமியிருந்தவர்கள் என்னை அடையாளம் கண்டு உள்ளே செல்ல அனுமதித்தனர். அங்கு ஸ்ரெச்சர்களில் ஏழு சடலங்கள் வைக்கப்பட்டிருந்ததைக் காணக்கூடியதாக இருந்தது. அவற்றில் ஒன்று காமினியின் சடலமாகும்.

கேள்வி: வேறு தலைவர்கள் கொல்லப்பட்டனரா?

விக்ரம: இப்போது கிடைத்த தகவலின்படி மரணமடைந்தவர்களின் எண்ணிக்கை அதிகம் என்று தெரியவந்துள்ளது. அந்த அறையினுள் கட்சியின் ஏழு முன்னணி அரசியல்வாதிகளின் சடலங்களை நான் கண்டேன். அவர்களில் காமினி விஜேசேகரா, வீரசிங்க மல்லிமாராய்ச்சி, ஜி. எம். பிரேமச்சந்திரா ஆகியோரின் சடலங்களும் இருந்தன.

கேள்வி: இது ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஒரு சோதனையாக அமையுமா?

விக்ரம: நிச்சயமாக.

கேள்வி: கட்சிக்கு அது தேர்தலில் என்ன தாக்கத்தை கொடுக்கும்?

விக்ரம: நல்லது. நாடும் கட்சியும் தீர்மானிக்க வேண்டிய விஷயம் இது. இத்துக்ககரமான சூழ்நிலையில் கட்சியின் முக்கியஸ்தர்களுடன் இது பற்றி பேச வாய்ப்பு எனக்கு கிடைக்கவில்லை.

இன்று அதிகாலை நான் பிரதமருடனும் ஏனைய அமைச்சர்கள் சிலருடனும் பேசியிருக்கின்றேன்.

நாட்டில் உருவாகியுள்ள பாரதூரமான நிலைவரம் பற்றி அவர்களுக்கு எடுத்துச் சொன்னேன்.

கேள்வி: இக்கொலைக்கு யார் பொறுப்பு என்று கருதுகின்றீர்கள்?

விக்ரம: தெளிவான சாட்சியங்கள் கிடைத்துள்ளன. தற்கொலைப் படையைச் சேர்ந்த பெண் ஒருவர்தான் இக்கொலைக்குக் காரணம் என்று சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் என்னிடம் தெரிவித்தார். ராஜீவ் காந்தியைக் கொலை செய்த மாதிரி இது அமைந்துள்ளது.

இப்போது தான் பிரதி பொலிஸ்மா அதிபர் ஒருவர் இன்னொரு தகவலைத் தெரிவித்தார். ஓர் உடலின் சில பகுதிகளையும் கால் ஒன்று, கை ஒன்று மற்றும் தலைமுடி ஆகியவையும் மேடைக்கருகில் காணப்பட்டன என்பதே அத்தகவலாகும்.

கேள்வி: இது விடுதலைப் புலிகளைத்தான் அடையாளம் காட்டுகின்றதா?

விக்ரம: நிச்சயமாக. அதில் சந்தேகமே இடையாது. காயமடைந்த சிலரை அறுவைச் சிகிச்சை செய்த டாக்டர்கள் சிலரும் தற்கொலைப் படையைச் சேர்ந்த ஒருவரினால் வெடிக்க வைக்கப்பட்ட குண்டினால் ஏற்பட்ட காயங்கள் என்றே கூறியுள்ளனர். கொல்லப்பட்ட எவரினதும்— காமினி உட்பட — சடலங்கள் அடையாளந் தெரியாதபடி சிதைந்து போகவில்லை. அடையாளம் தெரியக்கூடிய விதத்தில் சடலங்கள் இருந்தன. (இ-ா)

## வாழ்த்துகிறோம்

இன்று விருது பெறும் எமது கல்லூரியைச் சேர்ந்த பின்வரும் ஜனாதிபதி சாரணர்களை நாம் மனமார வாழ்த்துகிறோம்

- ந. கௌரிதாசன்
- ஜெ. அச்சுதன்
- கு. பார்த்திபன்
- தி. லக்ஸ்மணன்
- பா. சுதர்சன்
- கெ. கேதீசன்

யாழ். இந்து. நண்பர்கள்

(33512)

## அறிவித்தல்

மஞ்சவனப்பதி முருகன் ஆலயம்
கொக்குவில் மேற்கு.

27-10-94 வியாழக்கிழமை பிற்பகல் மூன்று மணிக்கு மேற்படி ஆலய மண்டபத்தில் பொதுக் கூட்டமும், நிர்வாக சபைத் தெரிவும் நடைபெறுமென ஆலயப் பிரிவுப் பொறுப்பாளர் அறிவித்திருக்கிறார். அங்கத்தவர்கள் எல்லோரும் தவறாது சமுகம் தரவும்.

-தற்காலிக நிர்வாகம்.

(33507)

## 60ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டியும்

கணபதிப்பிள்ளை இலம்போதரன்
(நாதன்)
(மீசாலை)

மலர்வு: 25 — 12 — 1964 உதிர்வு: 27 — 08 — 1994

தாயகம் சிறக்க வெளிநாடு சென்று அகால மரணத்தில் விண்ணகம் சென்றனையே! ஐயோ! நீங்காத நினைவாகினையே! என்று காண்போம் உன் இன்முகத்தை?

அப்பா, அம்மா, சகோதரிகள்,
மனைவி, மகன், உறவினர்கள், நண்பர்கள்.

குருக்கள் வீதி
மீசாலை. [7976]

## 31-ம் நாள் நினைவஞ்சலி



மலர்வு: 28 — 09 — 1922
உதிர்வு: 25 — 09 — 1994

அச்சுக்கூட ஒழுங்கை - கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகக் கொண்ட

வேலுப்பிள்ளை ஞானசுந்தரம்
(சோதிடர் கிளி)

எம் அன்புத் தெய்வத்தின் இறுதிக் கிரியைகளில் பங்கு கொண்டு சகல வழிகளிலும் உதவி புரிந்தவர்களுக்கு எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று 25-10-94 எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டி கிரியைகளிலும் மதிய போசனத்திலும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் பங்குபற்றி எமது அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!

பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள்,
உற்றார், உறவினர்.

அச்சுக்கூட ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில். (33511)

# காமினியின் வீட்டின் மீதும் வெள்ளியன்று குண்டுவீச்சு?

கடந்த வெள்ளிக்கிழமை காமினி திஸநாயக்காவின் வாசஸ்தலத்தின் மீது குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது என்றும்—

அதில் எவரும் காயமடையவில்லை என்றும் லண்டனில் இருந்து வெளியாகும் 'த கார்டியன்'' நாளிதழ் நேற்று செய்தி வெளியிட்டுள்ளது.

காமினி திஸநாயக்கா படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தான் கார்டியனின் தலைப்புச் செய்தியாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

தற்போது அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே நடைபெறும் சமாதானப் பேச்சுகளை காமினி திஸநாயக்கா கடுமையாக விமரிசித்து வந்தார் என்றும் 'கார்டியன்' செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-எ)

# பிரதமர் கண்டனம்

ஜனாதிபதி வேட்பாளரும் எதிர்க்கட்சித் தலைவருமான காமினி திஸநாயக்காவும், ஏனையோரும் கொல்லப்பட்டது மிகவும் காட்டுமிராண்டித் தனமானது என்று பிரதமர் சந்திரிகா குமாரதுங்கா நேற்று கண்டனம் தெரிவித்துள்ளார்.

நாம் ஜனநாயகத்தையும், நீதியையும் கட்டி எழுப்புவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டிருக்கும் போது இத்தகைய அரசியல் படுகொலைகள் நடப்பதை அனுமதிக்க முடியாது.

இதில் சம்பந்தப்பட்டவர்களைக் கண்டுபிடித்துத் தண்டிப்பது அவசியம். அதற்காக அரசு தனது முழு அதிகாரத்தையும் பயன்படுத்தும்.

எனது வாழ்க்கையில் நெருங்கிய இருவரை அரசியல் படுகொலைகள் மூலம் இழந்தவள் நான். அன்பு வைத்தவர்களின் இழப்பால் வரும் தாக்கத்தையும், மனக் கவலையையும் நான் உணர்வேன். அந்த உணர்வுடன் எனது அனுதாபங்களை திருமதி திஸநாயக்காவுக்கும் ஏனையோருக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மக்களைப் பதற்றமடையாது அமைதி காக்குமாறும், சட்டத்தையும், ஒழுங்கையும் குலைக்காதிருக்குமாறும் கேட்டுக் கொள்கிறேன் — என்று பிரதமர் தாம் விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## விசாரணைக்கு பொலிஸ் குழுக்கள்

கிராண்ட்பாஸ் குண்டு வெடிப்புச் சம்பவம் பற்றிய விசாரணை நடத்த பல பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

பொலிஸ் மா அதிபரின் மேற்பார்வையில் இவ்விசாரணைகள் மேற்கொள்ளப் படவுள்ளன. (இ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்**
292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## காமினியின் கொலை

ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரும், எதிர்கட்சித் தலைவருமான காமினி திஸாநாயக்கா கொலையுண்டுவிட்டார். கொழும்பு நகரின் கிராண்ட்பாஸ் பகுதியில் ஞாயிற்றுக்கிழமை இரவு நடைபெற்ற பரசாரக் கூட்டத்தில், நடத்தப்பட்ட பெரும் குண்டு வெடிப்பிலேயே அவரும், முன்னாள் அமைச்சர்கள் இருவரும், ஐ. தே. கட்சியின் செயலாளரும், மெய்ப்பாதுகாவலர்களுமாக, மொத்தம் அறுபது பேர் உயிரிழந்ததாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

குண்டுவெடிப்பை நடத்தியவர்கள், காமினியை இலக்கு வைத்தே அதனைச் செய்திருப்பர் என்றும், ஏனையோர் அதில் அகப்பட்டவர்களே என்றும் பாதுகாப்பு வட்டாரங்கள் கருதின. அதேபோல, காமினிக்குப் போதிய பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தும் இச்சம்பவம் நடைபெற்றிருப்பது குறித்து அவை அதிர்ச்சியும் தெரிவித்திருந்தன.

குண்டு வெடிப்புச் சம்பவத்தை — அரசியல் தலைவர்கள் உட்பட பலர் கொல்லப்பட்டிருப்பதை — பிரதமர் சந்திரிகா குமாரதுங்கா கடுமையாகக் கண்டித்திருக்கிறார். இச்சம்பவத்தைச் சாட்டாக வைத்து, நாட்டில் அமைதிக்குப் பங்கம் ஏற்படுத்த வேண்டாம் என்று மக்களைக் கேட்டிருக்கிறார். அரசியல் கட்சி ஆதரவாளர்களிடையே கலவரங்கள் மூளாமல் தடுப்பதற்காக அவசரகாலச் சட்டத்தையும், ஊரடங்குச் சட்டத்தையும் பிறப்பித்துள்ளார்.

இந்தக் குண்டு வெடிப்பை நடத்தியவர்கள் யார் என்பது குறித்து, இன்னும் ஊர்ஜிதமாகத் தெரிவிக்கப்படவில்லை. அதனைக் கண்டுபிடிப்பது அவ்வளவு ஒன்றும் இலகுவானதல்ல. அவ்வாறு கண்டுபிடிப்பதானாலும், ஊர்ஜிதப்படுத்துவதற்கு பல மாதங்கள் செல்லும். அப்போது இந்தச் சம்பவத்தால் ஏற்படக்கூடிய மனக்கொதிப்பு காமினி ஆதரவாளர்களுக்கு அடங்கிவிடக்கூடும்.

காமினி திஸாநாயக்கா இளவயதிலேயே அரசியல்வாதியாகியவர். ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் ஆட்சிக்காலத்தில் அவருக்கு மிக நெருக்கமாக இருந்தவர். காமினியையே ஜே. ஆர். தமது வாரிசாக்கிக் கொள்வார் என்ற நிலையும் இருந்தது. ஆனால் பிரேமதாசா அதற்குக் குறுக்கே முட்டுக்கட்டையாக நின்றார். அதனால் பிரேமதாசாவுடன் முரண்பட்டுக் கொண்டார். அதனால் லலித்துடன் சேர்ந்து ஐ. தே. கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டார். இருவரும்சேர்ந்து புதிய கட்சியை ஆரம்பித்தனர்.

ஆனால் பிரேமதாசா, லலித் மரணங்களின் பின்னர் விஜேதுங்கா மூலம் காமினி ஐ. தே. கட்சிக்குள் மீண்டும் நுழைந்தார். முன்னர் பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்கா எதிர்க்கட்சித் தலைவர் பதவியை பெறாமல் தடுத்து, கட்சித் தலைமைப் பீடத்தைக்கைப்பற்றும் நோக்கத்துடன் தாமே எதிர்க்கட்சித் தலைவரானார். காமினி ஐ. தே. கட்சியின் தலைமைத்துவத்தை மட்டுமன்றி, நாட்டின் தலைமைத்துவத்தையும் எவ்வாறும், எதனைச் செய்தும் தாமே பிடித்துவிடவேண்டும் என்ற ஆசை அவரிடம் மிகுந்திருந்தது.

மற்றவர்களை கீழே விழுத்திக்கொண்டு, தாம் தலைமைத்துவத்தைக் கைப்பற்றிவிடவேண்டும் என்ற அவரது பேராசையால் இவருக்கு ஐக்கிய தேசியக் கட்சிக்குள்ளேயே பலத்த எதிர்ப்பு இருந்தது. அவர்களுக்குள்ளேயே பலர் எதிரிகளாக இருந்தனர். மறுபக்கத்தில் தமிழர்களின் நியாயபூர்வமான உரிமைகளுக்கு இவர் எதிரானவராகவே இருந்தார்.

அதனால் இவரது கொலையின் சூத்திரதாரிகள் யார் என்று குறிப்பிட்ட ஒரு தரப்பினர் மீது விரல் சுட்ட முடியாது. எனினும் தெற்கில் அரசியல் தலைவர்களின் உயிர்களுக்கு பாதுகாப்பு இல்லாத நிலைமை இன்னும் தொடர்கிறது என்பதே உண்மை.

இதனால் சிங்கள மக்கள் தங்கள் எதிர்காலத் தலைவர்களில் ஒருவரை இழந்துவிட்டனர்.

மொத்தத்தில் காமினியின் மரணம் பெரும்பான்மை இனத்துக்கு ஏற்பட்ட பல இழப்புகளில் ஒன்றாகும்.

# இளம் வயதிலேயே எம்.பியானவர்



1942ஆம் ஆண்டு மார்ச் 20ஆம் திகதி பிறந்த காமினி திஸாநாயக்கா தமது 28ஆவது வயதிலேயே 1970ஆம் ஆண்டில் நாடாளுமன்றத்துக்குள் பிரவேசித்தார்.

மீண்டும் 1977இல் நுவரெலியா—மஸ்கெலியா தொகுதியின் முதலாவது நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்ட காமினி, அப்போது ஜே. ஆர். ஜெயவர்த்தனா தலைமையில் அமைக்கப்பட்ட அமைச்சரவையில் காணி, காணி அபிவிருத்தி, மகாவலி அபிவிருத்தி மற்றும் நீர்ப்பாசனத் துறை அமைச்சராகப் பதவியேற்றார்.

அன்று முதல்—

1990இல் ஜனாதிபதி பிரேமதாஸாவுடன் கருத்து வேறுபாடுபட்டு கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டு தன் மூலம் எம். பி. பதவியை இழக்கும் வரை— பெருந்தோட்டத் தொழில் அமைச்சர் பதவி உட்பட பல்வேறு அமைச்சர் [illegible] வகித்தார்.

### திரித்துவக் கல்லூரியில் ஆரம்பக் கல்வி

சட்டத்தரணியான காமினி தமது ஆரம்பக் கல்வியை கண்டி திரித்துவக் கல்லூரியில் பயின்றார்.

காமினி ஐ. தே. கவின் சார்பில் பல தடவைகள் எம். பியாகத் தெரிவு செய்யப்பட்டார்.

ஆனால் அவரது தந்தை அன்ட்ரூ திஸநாயக்கா அவருக்கு முன்னர் 1956இல் நுவரெலியா — மஸ்கெலியா தொகுதியில் ஸ்ரீ. ல. சு. க.— மக்கள் ஐக்கிய முன்னணி கூட்டணியின் சார்பில் போட்டியிட்டு எம். பியாகத் தெரிவு செய்யப்பட்டு, 1959 வரை அப்பதவியை வகித்திருந்தார்.

தமது இளம் வயதிலேயே அரசியலில் தீவிர ஈடுபாடு காட்டிய காமினி, தொழிற்சங்க நடவடிக்கைகள், இளைஞர் அணி செயற்பாடுகள் போன்றவற்றிலும் தீவிரமாக ஈடுபட்டவர்.

### கிரிக்கெட் துறையில்

ஸ்ரீலங்காவுக்கு கிரிக்கெட் துறையில் டெஸ்ட் அந்தஸ்து கிடைத்ததில் காமினியின் பங்கு குறிப்பிடத்தக்கது.

ஸ்ரீலங்கா கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் தலைவராக காமினி இருந்த போதே 1981 ஆம் ஆண்டு ஜூலை [illegible] அந்த அந்தஸ்து [illegible] குறிப்பிடத்தக்கது.

காமினியின் தலைமையில் அந்த ஆண்டு ஸ்ரீலங்கா கிரிக்கெட் பிரதிநிதிகள் குழு சர்வதேச கிரிக்கெட் மாநாட்டில் பங்குபற்றியது.

அந்த மாநாட்டில் வைத்து டெஸ்ட் விளையாடும் தகுதி ஸ்ரீலங்காவுக்கு வழங்கப்பட்டது.

### கட்சியிலிருந்து வெளியேற்றம்

1990 ஆம் ஆண்டு காலப் பகுதியில் அப்போதைய ஜனாதிபதி பிரேமதாஸாவுடன் கருத்து வேறுபட்டதால், லலித் அத்துலத்முதலியுடன் சேர்ந்து ஐ. தே. கவிலிருந்து வெளியேற்றப்பட்ட காமினி, லலித்துடன் சேர்ந்து ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி என்ற கட்சியை அமைத்தார்.

1993 ஏப்ரல் கடைசி வாரத்தில் லலித் அத்துலத்முதலி கொல்லப்பட்டதை அடுத்து, அக்கட்சியின் தலைமைப் பொறுப்பை அவர் ஏற்றார்.

### மீண்டும் ஐ. தே. கவில்

அண்மையில் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவுடன் சமரசம் செய்து கொண்டதை அடுத்து ஐ. தே. கட்சியில் மீண்டும் சேர்ந்து கொண்ட காமினி, அதையடுத்து கட்சியின் [illegible] மூலம் எம். பியாகவும் பின்னர் அமைச்சராகவும் நியமிக்கப்பட்டார்.

கடந்த ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சி அமைக்கத்தவறியதை அடுத்து காமினி எதிர்க்கட்சித் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார்.

அடுத்த மாதம் 9ஆம் திகதி நடைபெறவிருந்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதிலிருந்து தற்போதைய ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க பின்வாங்கியதை அடுத்து அத்தேர்தலில் ஐ. தே. க வேட்பாளராக காமினி தெரிவு செய்யப்பட்டிருந்தார். (உ)

## லீவுகள் ரத்து

இராணுவத்தினரின் லீவுகள் எல்லாம் உடனடியாக ரத்துச் செய்யப்பட்டன.

விடுமுறையில் உள்ள இராணுவத்தினர் எத்தரத்தினராக இருந்தாலும் சரி உடனடியாகக் கடமைக்குச் சமுகம் அளிக்கும்படி இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஜெரி டி சில்வா உத்தரவிட்டிருக்கிறார்.

காமினி கொல்லப்பட்டதை அடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (உ-எ)

# ஊழல் குற்றச்சாட்டுக்கும் இலக்கானவர் காமினி

இலங்கையில் ஊழலுக்குப் பேர் போன அரசியல்வாதிகளில் ஒருவர் காமினி திஸநாயக்கா என்று கூறப்படுவதுண்டு என வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது.

குறிப்பாக 1980களில் மாகாவலி அபிவிருத்தித் திட்டத்துக்கான வெளிநாட்டு நிதியில் பெரும் சுரண்டல் செய்தவர் என்ற குற்றச்சாட்டுக்கு இலக்கானவர் காமினி என்றும் தெரிவிக்கப்பட்டது.

யாழ் பொதுநூலகம் எரிக்கப்பட்டதன் பின்னணியில் இவரே சூத்திரதாரியாக விளங்கினார் என்றும் குற்றம் சுமத்தப்பட்டிருந்தது தெரிந்ததே. (உ-எ-5)

# பேச்சுக்கள் பாதிப்புறலாம் பிரேமச்சந்திரன் கவலை

கொழும்பு, ஒக். 25

காமினியை படுகொலை செய்த நடவடிக்கை கோழைத்தனமான ஒன்று. இதனால் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் நோக்கத்துடனான சமாதானப் பேச்சுக்களை தொடர்ந்து நடத்தும் வாய்ப்புக்கள் பாதிக்கப்படலாம்.

—இவ்வாறு கவலை தெரிவித்துள்ளார் ஈ.பி.ஆர்.எல். எவ். கட்சியின் செயலாளரும் முன்னாள் எம். பியுமான சுரேஷ் பிரேமச்சந்திரன்.

காமினியின் மறைவை ஒட்டி விடுத்த செய்தியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அரசு சமாதான முயற்சிகளைத் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார். (உ)

# கைதான தேசத் துரோகிகள்....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
ஸ்கந்தபுரம், கிளிநொச்சி, தொழில் வியாபாரம்.

4. பெயர்:- பசுபதி யோகராசா, (வயது 24), முகவரி ஆஸ்பத்திரி வீதி, சங்கானை, யாழ்ப்பாணம். தொழில் வியாபாரம், மா. முகவரி நெடுங்கேணி, முல்லைத்தீவு.

இவர்களின் தேசத்துரோகச் செயல்கள் குறித்து வெளியிடப்பட்டுள்ள அறிக்கை வருமாறு:



சந்திரகுமார்



செல்வராசா



வடிவேல்



யோகராசா

கடந்த 1993ஆம், 1994 ஆம் ஆண்டுகளின் காலப் பகுதிகளில் ஸ்ரீலங்கா இராணுவத்தின் உளவாளிகளுடன் தொடர்பினை ஏற்படுத்தி எமது விலைமதிக்கமுடியாத விடுதலைப்போராட்டத்தினையும், அப்போராட்டத்தோடு தம்மை இறுகப் பிணைத்து நிற்கும் மக்களையும் எதிரிக்கு காட்டிக் கொடுத்து தேசத்துரோகம் புரிந்த நால்வர் தமிழீழ விடுதலைப் புலிகளினால் கைது செய்யப்பட்டு அவர்களின் விசாரணைகளும் பூர்த்தியடைந்துள்ளன.

### இராணுவ உளவாளிகளுடன் தொடர்பு

தமது தனிப்பட்ட தேவைகளுக்காகவும், வியாபார நோக்கத்திற்காகவும் இவர்கள் வவுனியா சென்று வந்த வேளையில், அங்கு இராணுவ உளவாளிகளுடன் தொடர்பினை ஏற்படுத்திக்கொண்டனர். அவர்களால் வழங்கப்பட்ட அற்ப சலுகைகளுக்காக எமது தாயக விடுதலைப் போரைக் காட்டிக்கொடுத்தனர் என்பது இவர்களின் விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளது.

ஸ்கந்தபுரம், கிளிநொச்சியைச் சேர்ந்த சின்னராசா என்று அழைக்கப்படும் வடிவேல் அல்பிறட், அதே இடத்தைச் சேர்ந்த சின்னராசா என அழைக்கப்படும் நடராசா சந்திரகுமார், மூன்றாம் வட்டாரம், முள்ளியவளையைச் சேர்ந்த சிவப்பிரகாசம் செல்வராசா, சங்கானை யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பசுபதி யோகராசா ஆகியோரே இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களாவர்.

### வடிவேல்

வடிவேல் அல்பிறட் 1993 ஆம் ஆண்டு 5ஆம் மாதமளவில் ஊரில் தமக்கு இருந்த கடன் தொல்லைகளில் இருந்து தாம் தப்புவதற்காக வவுனியா நகர்ப் பகுதிக்கு சென்று அங்கு வாழத் தொடங்கினார். அங்கு இருந்த காலப்பகுதியில் இராணுவ உளவாளிகளுடன் தொடர்பு ஏற்பட்டு அத்தொடர்பினைப் பயன்படுத்தி வடபகுதிக்குள் தடை செய்யப்பட்ட பொருள்களை எடுத்து வந்து வியாபாரம் செய்து வந்தார்.

### தகவல் கொடுத்தவர்

இக்காலப் பகுதியில் வவுனியா ஜோசப் இராணுவ முகாமுக்கும் சென்று வந்த இவர் தனது வியாபாரத்தை மேலும் அதிகரித்து தடையின்றிச் செல்வதற்காக விடுதலைப் புலிகளின் செயற்பாடுகளையும் அவர்கள் தங்கும் இடங்களையும் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களின் நிலைப்பாடுகளையும் இராணுவத்திற்கு தகவலாக வழங்கத் தொடங்கினார். தனது தனிப்பட்ட கோபத்தை காரணமாக வைத்து இரண்டு அப்பாவித் தமிழ் மக்களை இராணுவத்தினருக்குக் காட்டிக் கொடுத்து அவர்கள் சிறையில் அடைக்கப்படுவதற்கு காரணமாகவிருந்தார்.

காலப் போக்கில் இராணுவ உளவுப் பிரிவின் முக்கிய நபர்களாகக் கருதப்படும் முத்தலீம், லோறன்ஸ் ஆகியோருடன் நேரடியாகத் தொடர்பு கொண்டு, அவர்களுக்கு யாழ்ப்பாணப் பகுதியில் குறிப்பிட்ட இடத்திற்கு விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர்கள் (முக்கிய பொறுப்பாளர்கள்) வந்து செல்வது தொடர்பான தகவல்களைக் கொடுத்து அவர்களது ஆலோசனையுடன் அக்குறிப்பிட்ட இடத்தில் வெடிகுண்டு வைப்பதற்கான பொறுப்பினையும் ஏற்றுக் கொண்டார்.

### குண்டுகளை வெடிக்க வைக்க பயிற்சி

இதன் பின்னர் இவருக்கு வெடிகுண்டினை தானியக்க கருவி மூலம் (றிமோட் கொன்றோளர்) வெடிக்க வைப்பதற்கான பயிற்சியும் வழங்கப்பட்டது. வடபகுதிக்குள் வைத்து வெடிகுண்டினை இவரிடம் சேர்ப்பிப்பதற்கான ஒழுங்குகளும் நிறைவேற்றப்பட்டிருந்தன. இந்நடவடிக்கைத் திட்டத்திற்காக இராணுவத்தினரிடம் இவர் பெரும் தொகையான பணத்தினை பேரம் பேசியிருந்தார். இதன் பின்பு இவர் வடபகுதிக்குள் வந்தவேளை [illegible] பட்டார்.

### சந்திரகுமார்

இரண்டாவது நபரான நடராசா சந்திரகுமார் என்பவரும், வடிவேல் அல்பிறட்டுடன் தொடர்பானவர். இவரும் வவுனியாவிற்குச் சென்று வியாபாரத்தில் ஈடுபட்டு வந்த வேளை இராணுவ உளவாளிகளுடன் தொடர்பினை ஏற்படுத்திக் கொண்டார். அவர்களுடைய உதவியுடன் வடபகுதிக்குள் தடை செய்யப்பட்ட பொருள்களைக் கொண்டு வந்து வியாபாரத்தில் ஈடுபட்டு வந்தார்.

### தடை செய்யப்பட்ட பொருள்கள் விற்பனை

இவ்வாறு இராணுவ உளவாளிகளுடன் ஏற்பட்ட நெருக்கமான தொடர்பினைப் பயன்படுத்தி, அற்ப சலுகைகளைப் பெற்றுக் கொள்வதற்காக, விடுதலைப் புலிகளின் முகாம்கள், இயக்கத்தின் முக்கிய உறுப்பினர்கள் தங்கும் இடங்கள், மற்றும் பல இயக்க செயற்பாடுகளை அவர்களுக்குத் தெரிவித்து வந்தார். இவற்றுக்குச் சன்மானமாக இராணுவத்தினரிடம் இருந்து பல தடவைகள் தடை செய்யப்பட்ட பொருள்களை நேரடியாகப் பெற்று வந்து விற்பனை செய்துள்ளார்.

### செல்வராசா

மூன்றாவது நபரான முள்ளியவளையைச் சேர்ந்த சிவப்பிரகாசம் செல்வராசா என்பவருக்கும் வவுனியாவிலேயே இராணுவ உளவாளிகளுடன் தொடர்பு ஏற்பட்டது. அத்தொடர்பின் மூலம் விடுதலைப் புலிகளின் முகாம்கள் பலவற்றைக் காட்டிக் கொடுத்துள்ளார். அதற்காக பெரும் தொகைப் பணத்தினை இராணுவத்திடம் இருந்து பெற்றுள்ளதுடன் பல முறை தடை செய்யப்பட்ட பொருள்களைப் பெற்று வியாபாரம் செய்துள்ளார். மேலும் வடபகுதிக்குள் வெடிகுண்டு வைப்பதற்காக ஜோசப் இராணுவ முகாமில் வைத்து வெடிகுண்டு பயிற்சியினையும் இவர் இராணுவ உளவாளிகளிடம் இருந்து பெற்றுள்ளார்.

### யோகராசா

நான்காவது நபரான சங்கானை, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பசுபதி யோகராசா [illegible] சென்று வரும் போது உள[illegible] தொடர்பினை ஏற்படுத்திக் கொண்டு தேசவிரோத வேலைகளில் தீவிரமாக ஈடுபட்டு வந்தார். இதன் போது முல்லை [illegible] அமைந்துள்ள [illegible] களின் [illegible] தொடர்பான தகவல்களையும், விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள் தொடர்பாகவும் எட்வேட்டிற்கு தகவல்களாக கொடுத்து சன்மானமாக பணமும் தடை செய்யப்பட்ட பொருள்களையும் பெற்றுக் கொண்டார்.

### தொலைத் தொடர்பு சாதனப் பயிற்சி

இவரால் காட்டிக் கொடுக்கப்பட்ட முகாம்களில் சில விமானத் தாக்குதல்களுக்கு உள்ளாகியமை குறிப்பிடத்தக்கது. குறிப்பாக நெடுங்கேணிப் பகுதியை மையமாக வைத்து இவரது நடவடிக்கைகள் அமைந்திருந்தன. இப்பிரதேசத்தில் இருந்து கொண்டே தகவல்களை இராணுவத்தினருக்குக் கொடுப்பதற்காக தொலைத் தொடர்பு சாதனப் பயிற்சியும் இராணுவ உளவுப் பிரிவினரால் இவருக்கு வழங்கப்பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

முன்னைய காலங்களிலும் இவர்கள் போன்றோரின் தேசத் துரோகத் தனங்கள் விடுதலைப் புலிகளால் அடையாளம் காணப்பட்டு வெளிக் கொண்டுவரப்பட்டது குறிப்பிடத்தக்கது. தமது சொந்த நலன்களிற்காகவும் அற்ப சலுகைகளுக்காகவும் எதிரிக்கு தமது சொந்த தாயகத்தையும், எம் இனிய மக்களையும் காட்டிக் கொடுக்க துணிந்துள்ளனர். ஏதும் அறியாத அப்பாவிப் பொதுமக்கள், துன்ப துயரங்கள் என்னவென்று அறியாத பச்சிளம் பாலகர்கள், மற்றும்போராளிகள் மரணித்த கோரச் சம்பவங்கள் என்றும் இவர்களின் துரோகத்தனங்களை தமிழீழத்திற்கு நினைவூட்டியவண்ணமே இருக்கின்றது.

நெஞ்சை நோக்கும் எதிரிக்கு முகம் கொடுத்து உங்கள் குழந்தைகள் களத்தில் நின்று போராடி தங்கள் இன்னுயிர்களை எமது இனத்தின் விடிவிற்காக நாள்தோறும் தியாகம் செய்து கொண்டிருக்கும் இவ்வேளை, துரோகத்தனங்களில் ஈடுபடுபவர்கள் தொடர்பாக மக்கள் விழிப்புடன் இருந்து தமிழீழத்தை பாதுகாக்க வேண்டும் — இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ)

## யாழ். நகரில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
அடுத்து, பிரதமர் சந்திரிகா குமாரதுங்க அமைச்சரவையின் அவசரக் கூட்டம் ஒன்றைக் கூட்டினார் என்றும்—

அந்தக் கூட்டத்திலேயே நேற்று நடைபெறவிருந்த பேச்சுவார்த்தையை கைவிடுவது என முடிவு செய்யப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டது.

பேச்சு ஒத்திவைக்கப்பட்ட தகவல் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு ஊடாக விடுதலைப்புலிகளுக்கு நேற்று யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

இதேவேளை, சமாதானப் பேச்சுவார்த்தைகளில் அரசாங்கப் பிரதிநிதிகளில் ஒருவராகக் கலந்து கொண்ட திரு. லயனல் பெர்னாண்டோ—

குண்டு வெடிப்புச் சம்பவம் சமாதான முயற்சியில் ஒரு பின்னடைவை உண்டாக்கிப் பாதிப்பை ஏற்படுத்தி இருக்கிறது.

ஆனால் குண்டு வெடிப்பை புலிகளே நடத்தினார்கள் என்ற சந்தேகம் உள்ளதாகக் கூறப்படுவதற்கும் அதற்கும் எவ்வித தொடர்புமில்லை.

இன்று (திங்கள்) நடத்தவிருந்த பேச்சுவார்த்தை இடை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது— என்று தெரிவித்தார்.

### சமாதானத்தை குலைக்கும் முயற்சி

அரசு விடுதலைப் புலிகளுடன் சமாதானம் செய்து கொள்வதைக் குலைக்கும் முயற்சியாகவே இப்படுகொலை நடத்தப்பட்டிருக்க வேண்டும் என்றும்—

சமாதானப் பேச்சுவார்த்தைக்கு இனி எதிர்ப்பு வலுக்கும் சாத்தியங்களே அதிகம் என்றும் அரசியல் விமர்சகர் அபயவர்த்தனா கருத்து வெளியிட்டிருக்கின்றார்.

காமினியைக் கொன்றது விடுதலைப் புலிகள்தான் என்பது நிரூபிக்கப்பட்டால் சமாதானப் பேச்சுவார்த்தையைக் காலவரையறையின்றி கைவிட வேண்டியதுதான் என முன்னாள் விமானப் படைத்தளபதி ஹரி குணதிலக மற்றும் பி. பி. ஸி. செய்தியாளர் ஜோர்ஜ் ஆனி ஆகியோர் கருத்து வெளியிட்டனர். (அ-உ-எ-6)

## புதிய...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
உயிரிழந்தால் அவரின் இடத்துக்கு புதிய வேட்பாளர் ஒருவரை அக்கட்சி தெரிவு செய்ய வேண்டும் என்பதும் —

அத்தகைய தெரிவு குறித்து அக்கட்சியின் செயலாளர் மூன்று நாட்களுக்குள் தேர்தல் ஆணையாளருக்கு உத்தியோகபூர்வமாக அறிவிக்க வேண்டும் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

ஆனால் ஐ. தே. கவின் தேர்தல் வேட்பாளருடன், கட்சிச் செயலாளரும் உயிரிழந்துள்ளதால் —

புதிய வேட்பாளர் பற்றிய அறிவிப்பை தேர்தல் ஆணையாளருக்குத் தெரியப்படுத்துவதற்காக புதிய செயலாளர் ஒருவரையும் அவசரமாகத் தெரிவு செய்ய வேண்டிய நிலை ஐ. தே. கவுக்கு ஏற்பட்டுள்ளது.

## புதிய செயலாளர்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
கூடும் ஐ.தே.கவின் நிர்வாகக்குழு அங்கீகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஜனாதிபதி தேர்தலுக்கான ஐ.தே.கவின் புதிய வேட்பாளரைத் தெரிவு செய்வதற்கு புதிய செயலர் நியமனம் வழிவகுக்கும் என்று கருதப்படுகிறது.

புதிய செயலர் தஹம் விமலசேன முன்னர் ஜெயவர்த்தனா அரசில் இலங்கை எரிபொருள் கூட்டுத்தாபனத்தின் தலைவராகப் பணிபுரிந்தவர்.

## பூரண...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
அரசாங்கத்தின் சார்பில் தகவல், சுற்றுலா, விமானப் போக்குவரத்துத்துறை அமைச்சர் தர்மசிறி சேனநாயக்கா நியமிக்கப்பட்டுள்ளார்.

காமினியின் பூதவுடல் தற்போது கொழும்பு அல்பேட் ஹவுஸ் கார்டின்ஸில் உள்ள அவரது இல்லத்தில் வைக்கப்பட்டுள்ளது.

பூதவுடல் நாளை பிற்பகல் 1 மணிக்கு நாடாளுமன்றக் கட்டடத்திற்கு எடுத்துச் செல்லப்படும். பிற்பகல் 2 மணியிலிருந்து 4 மணிவரை பூதவுடல் அங்குவைக்கப்பட்டிருக்கும்.

அதன் பின்னர் கொழும்பு ஆனந்த குமாரசாமி மாவத்தையில் உள்ள மகாவலி நிலையத்திற்கு பூதவுடல் கொண்டுவரப்படும்.

நாளை மாலை 5 மணியிலிருந்து எதிர்வரும் சனிக்கிழமை பிற்பகல் 1 மணி வரை மக்கள் அஞ்சலிக்காக பூதவுடல் வைக்கப்படும். (உ-4)

## தற்கொலைத்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
கிடக்கப் பொலீஸார் கண்டுபிடித்தனர் என்றும் தெரிவித்தன.

ஆனால் அந்தத்தலைபெண் கிராம சேவையாளர் ஒருவருடையது என அடையாளம் காணப்பட்டதாக நேற்றிரவு அறிவிக்கப்பட்டது.

இதேசமயம் —

நேற்று மாலை வெளியான செய்திகள் கால் ஊனமான ஆண் ஒருவரே அந்தக் குண்டை வெடிக்க வைத்திருக்கலாம் என்று தெரிவித்தன.

குண்டு வெடித்த மேடையில் ஊனமடைந்த ஒருவர் பாவிக்கும் இரு ஊன்றுகோல்கள் கிடக்கக் கண்டுபிடிக்கப்பட்டிருப்பது இந்த ஊகத்தை மேலும் ஊர்ஜிதப்படுத்துவதாக இருப்பதாகக் கூறப்படுகிறது.

இதேவேளை, டெனிம் காற்சட்டை ஒன்றின் சிதைந்த பகுதிகள் சம்பவம் நடந்த இடத்தில் கண்டுபிடிக்கப்பட்டன என்றும் பொலீஸார் தெரிவித்தனர்.

கொல்லப்பட்டவர்களின் உடல்களிலும் காயமடைந்தவர்களின் உடல்களிலும் மேற்பகுதிகளில் மட்டுமே காயங்கள் ஏற்பட்டன என்றும் —

கொலையாளி தனது உடலில் குண்டுகளை கட்டி வைத்து வெடிக்கச் செய்திருக்க வேண்டும் என்ற வாதத்தையே இது நிரூபிப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தரையில் குண்டு வெடித்ததற்கான தடயங்கள் எதுவும் காணப்படவில்லை என்றும் சொல்லப்படுகிறது.

பொலீஸ் வட்டாரங்களை மேற்கோள் காட்டி இந்திய வானொலி இத்தகவலை வெளியிட்டது.

## ஜனாதிபதி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
ஒருவரை அடுத்த மூன்று நாட்களுக்குள் உயிரிழந்த வேட்பாளரின் கட்சியின் அல்லது குழுவின் செயலாளர் நியமிக்கவேண்டும்.

அவ்வாறு நியமிக்கப்படும் வேட்பாளரின் பெயரை புதிதாக வாக்குச்சீட்டில் சேர்த்து தேர்தலை தேர்தல் ஆணையாளர் நடத்துவார்.

இதன்படி—

காமினிக்காக புதிய வேட்பாளர் ஒருவரை ஐ. தே. க. தெரிவு செய்ய வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. (உ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகள் மீது குற்றம் சுமத்துகிறது படை!

கொழும்பு, ஒக். 25

காமினியின் படுகொலைக்கு விடுதலைப் புலிகளே காரணம் என்று படை வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை—

காமினியின் கொலைக்கு விடுதலைப் புலிகளே காரணம் எனக் குற்றம் சுமத்தும் வகையில் சில செய்தி ஏஜென்ஸிகளும் நேற்று செய்திகளை வெளியிட்டன.

காமினியை கொன்ற வெடிகுண்டை எடுத்து வந்தவர் ஊன்று கோலுடன் நடக்கும் ஓர் ஊனமுற்றவர் என்றும்—

எனவே போரில் கால்களை இழந்த விடுதலைப் புலிகள் இயக்கப் போராளியாக இவர் இருக்கக் கூடும் என்றும்—

சமீபத்தில் இராணுவ போர்க்கப்பல் தற்கொலைப் படைமூலம் தகர்க்கப்பட்ட போது கூட இது போன்ற ஊன்று கோல்கள் காணப்பட்டன. என்றும் இராணுவதரப்பு குறிப்பிடுகின்றது

இதன் மூலம் காமினியை படுகொலை செய்தவர்கள் விடுதலைப் புலிகளே தான் என்று இராணுவம் கருத்து வெளியிட்டிருப்பதாக வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது.

மிகவும் சக்தி வாய்ந்தவெடி குண்டை வெடிக்கச் செய்தவர், தானும் வெடி குண்டுடன் உயிர்துறந்துள்ளதால் வழக்கம் போல் இப்படுகொலையை விடுதலைப் புலிகளே தங்கள் தற்கொலைப் போராளிகள் மூலம் நடத்தியிருப்பதாக இலங்கை இராணுவமும் விடுதலைப் புலிகளுக்கு எதிரான தமிழர் குழுக்களும் குற்றஞ்சாட்டி இருப்பதாக மற்றொரு செய்தி ஏஜென்ஸி தெரிவித்தது.

''இப் படுகொலையை இவ்வளவு திறமையாக நடத்தும் முறை விடுதலைப் புலிகளுக்கே கைவந்த கலை''— என்று புளொட் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்தார்.

இந்தியாவை ஆதரிப்பவர் காமினி திஸாநாயக்கா என்பதால் காமினியை தீர்த்துக் கட்ட விடுதலைப்புலிகள் முடிவு செய்திருக்கலாம்''— என்று ஈ. பி. ஆர். எல். எவ் பிரமுகரும் முன்னாள் மாகாண அமைச்சருமான அபுயூசுப் தெரிவித்துள்ளார்.

காமினியின் மைத்துனரான திரு விக்கிரம வீரசூரியாவும் இச்சம்பவத்துக்கு விடுதலைப்புலிகள் மீதே குற்றம் சுமத்தியுள்ளார்,

''விடுதலைப் புலிகள் தாம் நடத்தும் இத்தகைய தாக்குதல்களுக்கு வழமையாக பொறுப்பு ஏற்பதில்லை. என்றாலும் உலகில் புலிகள் தவிர, வேறு எந்த ஒரு குழுவும் இப்படிப்பட்ட பிரத்தியேக பயிற்சி பெற்ற தற்கொலைப் படை அணியைக் கொண்டிருக்கவில்லை.''— என்று பி. பி. ஸி. தெரிவித்தது.

''தமிழ்ப் பிரிவினை வாதிகளுக்கு எதிராகக் கடும்போக்கைக் கடைப்பிடித்தவர் காமினி. கடந்த சில மாதங்களாக மிகக் கடுமையான மிரட்டல்களையும் அவர் விடுத்து வந்தார். ஜனாதிபதித் தேர்தலில் அவர் வெற்றி பெற்றால்அமைதி முயற்சி தடைப்படும் என புலிகள் கருதுவதற்கு நிறைய வே சந்தர்ப்பங்கள் உள்ளன''— என்று பி. பி. ஸியின் அரசியல் விமர்சகர் ஒருவர் தெரிவித்தார்.

(உ-எ-4)

# புலிகளும் மறுப்பு

கொழும்பு, ஒக். 25

காமினி திஸநாயக்காவும் ஏனைய அரசியல் பிரமுகர்களும் கொலையுண்ட குண்டு வெடிப்புச் சம்பவத்துக்கும் தமக்கும் தொடர்பில்லை என்று —

தமிழீழ விடுதலைப் புலிகள் குறிப்பிட்டதாக யாழ்ப்பாணத்திலிருந்து நேற்று வந்த வீடியோ படப்பிடிப்பாளர் ஒருவர் — தம்மிடம் தெரிவித்ததாக பி.பி.ஸி. கொழும்புச் செய்தியாளர் ராஷிகா இக்பால் கூறினார்.

தாம் இதில் சம்பந்தப்படவில்லை என்பதனை தமது போராளிகளுக்கு தெரியப்படுத்தியதாக விடுதலை புலிகள் பிரமுகர்கள் தம்மிடம் கூறியதிலிருந்து இதனையே தாம் உணரக்கூடியதாக இருந்ததாகவும் அந்த வீடியோ படப்பிடிப்பாளர் கூறினார் — என்றும் ராஷிகசொன்னார்.

இதேவேளை—

காமினி திஸாநாயக்காவின் படுகொலையில் தங்களுக்கு தொடர்பு எதுவும் இல்லை என்றும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் அறிவித்துள்ளதாக— ரொய்ட்டர் செய்தி ஸ்தாபனம் அறிவித்தது.

(அ-எ)

# புலிகள் மீது குற்றம் சுமத்த அரசு மறுப்பு!

கொழும்பு, ஒக். 25

காமினி கொலையை அடுத்து நேற்று அமைச்சரவைக் கூட்டம் நடந்தது. அதன் பின்னர் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் —

இக்குண்டுத் தாக்குதல் பற்றிய விசாரணை முடியும் வரை எவர் மீதும் நிச்சயமாகக் குற்றஞ் சுமத்த முடியாதென்று அரச பேச்சாளர்கள் தெரிவித்தனர்.

பொலிஸ் மற்றும் இராணுவ வட்டாரங்களை மேற்கோள்காட்டி ஐ.தே.க. பிரமுகர்கள் விடுதலைப் புலிகள் மீது குற்றஞ்சாட்டியுள்ள போதும் —

அரசு அத்தகைய குற்றச்சாட்டை சுமத்துவதினின்று தன்னை தவிர்த்துக் கொண்டுள்ளது என்று பி. பி. ஸி. தெரிவித்துள்ளது.

அவசியமேற்படின் வெளி நாட்டு நிபுணர்களைத் தருவித்து விசாரணையை நடத்துவதற்கு அரசு தயாராகவிருப்பதாகவும் அரச பேச்சாளர்கள் இச்செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தனர்.

இச்செய்தியாளர் மாநாட்டில் தகவல்துறை அமைச்சர் தர்மசிறி சேனநாயக்கா, நீதி அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ், தகவல்துறை அமைச்சின் செயலாளர் லயனல் பெர்னாண்டோ ஆகியோர் பங்குபற்றினர்.

(உ-எ)

# புலிகளைத் தவிர வேறு எதிரிகளும் காமினி திஸநாயக்காவுக்கு உள்ளனர்

விடுதலைப் புலிகளைத் தவிர காமினிக்கு வேறு பல எதிரிகளும் இருப்பதை பி.பி.ஸி. சுட்டிக்காட்டியது.

இந்தியப் படையை வடக்கு – கிழக்கிற்கு கூட்டி வந்த இலங்கை — இந்திய ஒப்பந்தம் உருவாவதற்கு காமினி முன்னின்று உழைத்தவர் என்பதாலும் —

யாழ். நூல்நிலையம் எரிப்புக்கு காமினியே சூத்திரதாரி என்று கூறப்படுவதாலும் —

அண்மைக் காலத்தில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான தீவிர கருத்துக்களை வெளியிட்டு வந்த காமினி திஸநாயக்கா, புலிகளின் கொலை முயற்சிக்கு தாம் ஆளாகக்கூடும் எனக்கூறி வந்ததாலும் —

இக்கொலைக்கு புலிகள் மீது எடுத்த எடுப்பிலேயே குற்றம் சுமத்துவது இலகுவாக இருக்கிறது.

ஆனால் காமினிக்கு அவரது கட்சிக்குள்ளேயே பல அரசியல் வைரிகள் இருந்தனர்.

★ கட்சியை விட்டு விலகி சிறிது காலம் கட்சியைக் காட்டிக் கொடுத்தமை.

★ கட்சிக்குத் திரும்பி வந்தமை.

★ எதிர்க்கட்சித் தலைமைப் பதவியை போட்டியிட்டு கைப்பற்றியமை.

★ கட்சியில் இருந்தவாறே பிரேமதாஸாவுக்கு எதிராக குற்றவிசாரணைப் பிரேரணையை முன்எடுத்தமை

— இப்படி பல காரணங்களுக்காக அவரை கட்சியின் துரோகியாக அவரது கட்சிக்காரர்கள் பலர் கருதி வந்தனர்.

கட்சிக்குள்ளேயே பல கெட்ட நோக்கங்களை அடைவதற்காக வன்செயல்களைப் புரிந்த பல குழுக்கள் இருந்துள்ளன.

இப்படி பி. பி. ஸி. சுட்டிக்காட்டியது.

## பொலீஸார் 18பேரும் பலி

கிராண்ட்பாஸ் குண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்டவர்களில் 18 பேர் பொலீஸார் என்று ஜனாதிபதி அலுவலக உதவியாளர் ஒருவர் தெரிவித்தார்.

இவர்கள் காமினியின் பாதுகாவலர்களாகப் பணிபுரிந்தவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இத்தகவலை ஆஸ்திரேலிய வானொலி வெளியிட்டுள்ளது.

## மணித்தியாலம் தோறும் செய்தி

காமினி கொலையை அடுத்து நாட்டில் ஏற்பட்டிருக்கும் நெருக்கடியைத் தொடர்ந்து —

ரூபவாஹினி மற்றும் வானொலியில்மணித்தியாலத்துக்கு ஒரு தடவை செய்திகள் வெளியிட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது,

(உ-எ-6)

## அடையாளம் காணப்படாத சடலங்கள்

கொழும்பு, ஒக். 25

குண்டு வெடிப்பில் கொல்லப்பட்டவர்களின் சடலங்களில் பெரும்பாலானவை அடையாளம் காணப்படவில்லை.

கொழும்பு பெரியாஸ்பத்திரியில் ஒரு சமயத்தில் 20 சடலங்கள் இருந்தன என்று தெரிவிக்கப்பட்டது (இ-எ)

## நரோமா சேவை ரத்து

யாழ்ப்பாணம், ஒக். 25

திருமலையில் இருந்துஇன்று பருத்தித்துறைக்கு வரவிருந்த ''நரோமா'' பயணிகள் கப்பல் சேவை ரத்துச் செய்யப்பட்டிருப்பதாக பாதுகாப்பு அமைச்சு யாழ். செயலகத்துக்கு அறிவித்துள்ளது.

அடுத்த 'நரோமா கப்பல் சேவை இடம்பெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்று மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ப. திலகநாயகம் தெரிவித்துள்ளார்.

(ஐ-4)

## இசை ஆராதனை

யாழ்ப்பாணம், ஒக். 25

ஸ்ரீராகவேந்திர சுவாமிகள் மிருதிகா பிருந்தாவன இசையாராதனை இன்று செவ்வாய்) மாலை 4.15 மணிக்கு நல்லூர் கோவில் வீதியில் உள்ள ஸ்ரீராகவேந்திரா சுவாமிகள் ஆலயத்தில் நடைபெறும்.

(ஐ-4)

## அதிபர்களுக்கு கூட்டங்கள்

யாழ்பாணம், ஒக் 25

தெல்லிப்பழை மற்றும் சண்டிலிப்பாய் கோட்டங்களைச் சேர்ந்த அதிபர்களுக்கான கூட்டங்கள் இன்று பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளன.

தெல்லிப்பழைக் கோட்டத்துக்கான கூட்டம் மகாஜனக் கல்லூரியிலும், சண்டிலிப்பாய் கோட்டத்துக்கான கூட்டம் மானிப்பாய் இந்துக் கல்லூரியிலும் நடைபெறும்.

தெல்லிப்பழைக் கோட்ட அதிபர்கள் 1989 முதல் 93 வரையான காலப்பகுதியில் நியமனம் பெற்ற பயிலுநர் பட்டதாரிப்பயிலுநர் சம்பந்தமான சகல விவரங்களையும் தம்முடன் எடுத்து வரும்படி பிரதிக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

(ஐ)

## செய்தியாளர்கள் திரும்பினர்

யாழ்ப்பாணம், ஒக். 25

நேற்று யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருந்த அரச - புலிகள் இரண்டாம் கட்டப் பேச்சுகள் தொடர்பான செய்திகளைச் சேகரிப்பதற்காக இங்கு வந்திருந்த 17 பேர் கொண்ட செய்தியாளர் குழு நேற்று நண்பகல் கொழும்பு திரும்பியது.

பேச்சுவார்த்தை கைவிடப்பட்டதாக நேற்று அரசு அறிவித்ததை அடுத்தே செய்தியாளர் குழுவினர் இங்கிருந்து புறப்பட்டனர்.

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் உதவியுடன் பலாலி இராணுவ அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு அனுமதி பெற்ற அவர்கள், பின்னர் பருத்தித்துறையில் இருந்து'' கோமாரி'' கப்பல் மூலம் காங்கேசன்துறைக்குச் சென்றனர். அங்கிருந்து அவர்கள்விமான மூலம் கொழும்பு செல்ல ஏற்பாடாகியிருந்து.

(ஐ-4)

## வேக நடைப் போட்டி

யாழ்ப்பாணம், ஒக். 25

யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினரால் நடத்தப்படும் மாவட்ட தடகள விளையாட்டு விழாவினையொட்டிய ஆண்கள், பெண்களுக்கான வேகநடைப் போட்டிகள் நாளை புதன்கிழமை காலை 7-00 மணிக்கு யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மைதானத்தில் நடைபெறவுள்ளன.

இப் போட்டிகளில் பங்குபற்றவுள்ள சகல போட்டியாளர்களையும்நாளை புதன் காலை 7-00 மணிக்கு யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மைதானத்திற்குச் சமுகமளிக்குமாறு யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழு அறிவித்துள்ளது.

(ஒ)

# புலிகளின் குரல் வானொலியில்

### 25 — 10 — 1994

### செவ்வாய் இரவு

★ 8-01 — ஊர்சுற்றும் ஒலிவாங்கி.

★ 8-10 — அறிந்து கொள்ளுங்கள் - தகவல் களஞ்சியம்.

★ 8-20 — நலந்தானா? – சலரோக வியாதி வருமுன்னர் காக்கவேண்டியதன் அவசியத்தையும் அதற்கான ஆலோசனைகளையும் வைத்திய கலாநிதி சுப்பிரமணியம் வழங்குவார்.

★ 8-30 — செய்திகள்

★ 8-40 — கருத்துக்களம்- இ. இராஜேஸ்வரன் எழுதிய ''விளக்கு''.

★ 8-50 — களமும் கானமும் – எஸ். லாவண்யா எழுதிய ''நினைவுகள்''.

### 26 — 10 — 1994

### புதன் காலை

★ 7-02 — மாவீரவணக்கம்

★ 7-15 — நீங்கள் கேட்டவை.

★ 7-30 — செய்திகள்

★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்

★ 7-40 — நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி.

## சிறிய குண்டாம்

குண்டு வெடித்த இடத்தில் நேற்று அடைமழைக்கு மத்தியில் அழிபாடுகளை கிளறி எடுத்த பொலிஸார்,வெடித்த குண்டு சிறிய குண்டுதான் என்று தெரிவித்ததாக பி. பி. ஸி. குறிப்பிட்டது.

(உ)

## படுகாயமுற்ற....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவருக்கு நேற்று நண்பகல் வரை இரண்டு தடவைகள் அவசர அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டன. இப்போது அவசர வைத்திய பிரிவில் அவர் வைக்கப்பட்டிருக்கிறார்.

ஸ்ரீலங்காவில் இடம்பெற்ற அரசியல் படுகொலைகளில் ஒஸியின் அரசியல் வாழ்க்கையும் அலைக்கழிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

தற்போதைய பிரதமர் சந்திரிகா குமாரதுங்காவின் கணவரான விஜய குமாரதுங்க ஸ்ரீலங்கா மக்கள் கட்சியை ஆரம்பித்தபோது அவருடன் சேர்ந்து இயங்கியவர் ஒஸி. 1988ஆம் ஆண்டு விஜேகுமாரணதுங்க சுட்டுக்கொல்லப்பட்டார்.

பின்னர் ஒஸியின் ஸ்ரீலங்கா மக்கள்கட்சி ஈ. பி. ஆர். எல். எவ்வுடன் ஒரே அணியில் செயற்பட்ட போது ஈ. பி. ஆர். எல். எவ். தலைவர் பத்மநாபா உட்பட அக் கட்சியின் முக்கிய பிரமுகர்கள் சென்னையில் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

பின்னர் ஜனாதிபதி பிரேமதாஸாவுடன் ஒன்றிணைந்து அவரின் குரலாக ஒஸி செயற்பட்டார். 1993 மே முதலாம் திகதி குண்டு வெடிப்பில் பிரேமதாஸா உயிரிழந்தார்.

அதனைத் தொடர்ந்து காமினியின் தேர்தல் பிரசார மேடையில் அவரின் மேடைசகாமாக ஒஸி விளங்கினார். காமினியும் நேற்று குண்டு வெடிப்பில் பலியாகியுள்ளார்.

# வெடிகள், வாணவேடிக்கைகளுக்கு இடையே குண்டும் வெடித்தது!

கொழும்பு, ஒக். 25

காமினி திஸநாயக்கா கிராண்ட்பாஸ் கூட்டத்தில் பேசி முடித்ததும் தொடர் பட்டாசுகள் கொளுத்தப்பட்டன, வாணவேடிக்கைகள் இடம்பெற்றன. அவற்றினூடே வெடிகுண்டும் வெடித்தது.

அக்கூட்டத்தில் காமினி பதினைந்து நிமிடங்களே பேசினார். அவர் பேசி முடித்த போது இரவு 12.15 மணி.

''இரவு வணக்கம் சொல்லவா? காலைவணக்கம் எனச் சொல்லவா?''— என்று கூறி சிரித்தவாறு அவர் பிறருடன் கைகுலுக்க முற்பட்டபோது வெடிகுண்டு வெடித்ததாக சொல்லப்படுகிறது.

(உ-ா)

# ஐ.தே.க. ஜனாதிபதி வேட்பாளர் யார்? டி.பியா? ரணிலா? காமினி மனைவியா?

கொழும்பு, ஒக். 25

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஐ. தே .க. சார்பில் போட்டியிடும் புதிய வேட்பாளர் யார் என்று பல ஊகங்கள் எழுந்துள்ளன.

தற்போதைய ஜனாதிபதி விஜேதுங்கா ,முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா, அல்லது காமினியின் மனைவி சிறிமா திஸநாயக்கா என்பவர்களின் பெயர்கள் பரிசீலிக்கப்படலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

காமினிக்குப் பின்னர் கட்சியின் மூத்த உறுப்பினராக இருக்கும் ரணில் விக்கிரமசிங்கவே கட்சியின் தலைமைப் பொறுப்பை தொடர்ந்து ஏற்றுக் கொள்வார் என்றும் —

அவரே ஜனாதிபதி வேட்பாளராக களத்தில் குதிப்பார் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

ஆனால் இக்கட்டான இக்காலகட்டத்தில் தலைமைப் பதவியை ஏற்று, தேர்தலில் தோல்வியுற்றால் அது தனது அரசியல் எதிர்காலத்தையே பாதித்து விடும் என்று கருதி ரணில் பின்வாங்கக் கூடும் என்றும் ஒரு கருத்து கூறப்பட்டது.

அப்படியான நிலையில் நிலைமையைச் சமாளிக்கவும்—

காமினியின் படுகொலையால் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள அனுதாப அலையைப் பயன்படுத்தி தேர்தலில் வெற்றியீட்டலாம் என்ற நப்பாசையினாலும் —

டி. பி. விஜேதுங்காவே ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளர் பதவியை ஏற்றுக் கொள்ளக் கூடும் என்றும் கருதப்படுகிறது.

ஆனால் டி. பி. விஜேதுங்காவுக்கு வெளியில் காமினியின் துணைவியாருக்கோ அல்லது வேறு எவருக்கோ வேட்பாளர் பதவினய விட்டுக் கொடுப்பது கட்சியின் எதிர்காலத் தலைமைப் பதவியை ரணில் தாரைவார்த்துக் கொடுப்பதாகப் போய் விடும் என் தால் அத்தகைய திட்டத்துக்கு ரணில் விட்டுக் கொடுக்கமாட்டார் என்றும் கூறப்பட்டது.

## பிளாம்பயான் சேவையும் இடைநிறுத்தம்

யாழ்ப்பாணம், ஒக். 25

திருமலைக்கும், பருத்தித்துறைக்கும் இடையே நோயாளர் சேவையில் ஈடுபட்ட 'பிளாம்பயான்' கப்பலில் ஏற்பட்ட இயந்திரக் கோளாறை அடுத்து அந்தக் கப்பலின் சேவை மறு அறிவித்தல் வரை இடை நிறுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ)

## கிளாலி - பூநகரி படகுச்சேவை

யாழ்ப்பாணம், ஒக். 25

கிளாலி—பூநகரி படகுச் சேவை இன்று செவ்வாய்க் கிழமை வழமையான நேரத்தில் நடைபெறும் என விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.

(ஐ-4)

## கொழும்பு....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

குக் கொண்டு வரப்பட்டது.

நாட்டு மக்களை அமைதியாக இருக்கும்படி பிரதமர் சந்திரிகாவும் ஜனாதிபதி விஜேதுங்காவும் மறைந்த காமினி திஸாநாயக்காவின் துணைவியார் சிறிமா திஸாநாயக்காவும் கேட்டுக்கொண்டனர்.

சம்பவம் நடந்த இடம் சிதறிய உடல்கள், இரத்தம் ஆகியவற்றுடன் போர்க்களம் போல் காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் நடந்த இடம் போக்குவரத்துக்கும் ஆள்நடமாட்டத்துக்கும் தடை செய்யப்பட்டுள்ளதாக பொலீஸார் அறிவித்தனர். விசாரணைகள் முடியும் வரை இத் தடை இருக்கும் என்று தெரிவிக்கப்படுகிறது.

(உ-எ)


## மலிவு விற்பனை வாரம்

24 — 10 — 1994 — 30 — 10 — 1994

★ கேர் (f) போம் பிறசியர்ஸ்
★ சில்வர் சீல்ட் சொக்ஸ் வகைகள்
★ பெனியன்கள் ★ தையல் நூல் வகைகள்
★ எலாஸ்டிக் வகைகள் ★ யட்டிகள்

மற்றும் புடைவை வகைகளையும் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

★ சிறி முருகன் ★

303, காங்கேசன்துறை சாலை, யாழ்ப்பாணம்.

[33433]


## மரண அறிவித்தல்கள்

### சின்னத்தம்பி தம்பிஐயா (துரை)

(ஓய்வு பெற்ற யாழ். மாநகரசபை உத்தியோகத்தர்)

157/3, கோவில் வீதி, நல்ல லஷ்மி அவனியூ, நல்லூரைச் சேர்ந்த சின்னத்தம்பி தம்பிஐயா நேற்றுக் காலமானார்.

இவர் திருமதி சிவனேஸ்வரி தம்பிஐயா (ஓய்வு பெற்ற ஆசிரியை — அச்சுவேலி) அவர்களின் அன்புக் கணவர் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

கு. பற்குணராசா

(பெறாமகன்)

கோட்டக்கல்வி அலுவலகம்,
யாழ்ப்பாணம்.

(33514)

### PRINCE RATNAM

உடுவில் 'லவ்லேனைச் சேர்ந்த திரு. பிறின்ஸ் இரட்ணம் 21-10-94இல் திருகோணமலையில் காலமானார், நல்லடக்கம் 23-10-94 அன்று நடைபெற்றது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் தயவாக ஏற்றுக்கொள்ளவும்.

அன்னாரை நினைவு கூர்ந்து கடவுளுக்கு நன்றி செலுத்தும் ஆராதனை வருகிற சனிக்கிழமை (29-10-94) மாலை 4-00மணிக்கு உடுவில் தென் இந்திய திருச்சபை ஆலயத்தில் நடைபெறும். அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

தகவல்:

அருட்திருமதி ஏ. ஆர். தம்பியப்பா.

குருமனை,
மானிப்பாய்.

[7975]


## ஜி. எஸ். லிங்கநாதன் அன் கோவின்

மாபெரும் தீபாவளி

மலிவு விற்பனை வாரம்

எமது வாடிக்கையாளர் உட்பட அனைவருக்கும் ஓர் அரிய சந்தர்ப்பம்

உங்கள் தெரிவுகளுக்கு முந்திக் கொள்ளுங்கள்

மலரும் தீபாவளித் திருநாளை முன்னிட்டு அனைத்து ஜவுளிகளும்

மலிவு விலையில் விற்பனையாகின்றன

"மாபெரும் மலிவு விற்பனை"

ச. லிங்கநாதன்

வண்ணச்சோலை

13, 14, பெரியகடை வீதி, சோதியா தெரு, யாழ்ப்பாணம்.

[33484]


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிடெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 25—10—1994 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org